**முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் - 2020**

முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆம் திகதிய எஸ்எல்-பி116 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையிலுள்ள 4 ஆம் பிரிவின் 6(ஆ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. அடிப்படை உட்கட்டமைப்பை முன்னேற்றுவதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 20,622 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 15,409 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 17,185 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 12,957 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,437 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 2,452 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூலை 07 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணங்களாக ரூபா 300,427,708 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் இது ரூபா 268,355,136 ஆகக் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 32,072,572 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | 32.07 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆலோசனை சேவைக்கு செலுத்தப்பட்ட முற்பணங்கள் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 133,488,236 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்புடைய குறிப்பு 09 இல் ரூபா 115,877,554 ஆக பிழையாக காட்டப்பட்டிருந்தது. | 17.61 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களுக் கான குறிப்புக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றில் சிவில் வேலைகளின் கிரயம் ரூபா 946,464 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 0.95 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை வேலை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களில் ரூபா 302,588 தொகை தவறாக | 0.30 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டுள்ளது. | | | |
| (உ) | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 119 மில்லியன் நான்கு செயற்திட்ட அமல்ப்படுத்தல் பிரிவுகளின் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் கணிப்பீடுகளின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 128 மில்லியனாக காணப்பட்டது. இது தொடர்பில் ரூபா 9 மில்லியன் வேறுபாடு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. | 8.70 | பிஎம்யூ மற்றும் செயற்திட்ட அமுல்ப்படுத்தல் பிரிவு ஆகியவற்றால் இரண்டு முறைகள் பின்பற்றப்பட்டிருந்தன. | காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை தயாரிப்பதற்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மற்றும் செயற்திட்ட அமுல்ப்படுத்தல் பிரிவுகள் ஆகிய இரண்டினாலும் ஒரே மாதிரியான முறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஊ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 9,890,231 தொகையான குத்தகை வட்டி கொடுப்பனவு காட்டப்பட்டிருந்தது. | 9.89 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | எல்கேஏஎஸ் 07 மற்றும் எஸ்எல்எவ்ஆர்எஸ் 16 இன் பிரகாரம் நிதி நடவடிக்கைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டிய குத்தகைப் பொறுப்பின் மூலதனக் கொடுப்பனவு ரூபா 15,493,129 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 15.49 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | சிவில் வேலைகளிற்கான கொடுப்பனவு ரூபா 546,906,655 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றுக்களில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் சிவில் வேலைகளின் கொடுப்பனவு தொடர்பாக முற்பணத் தொகைகள் மற்றும் திரட்டப்பட்ட விலைப்பட்டியல் தொகைகள் என்பவற்றைச் சீராக்கம் செய்யும் போது ரூபா 15,248,695 குறைத்துக் காட்டப்பட்டு ரூபா 562,155,350 தொகை கணிப்பிடப்பட்டிருந்தது. | 15.25 | அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

**2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

| பேரேட்டுக் கணக்கு | | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | தொடர்புடைய ஏட்டின் விபரம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதிக்கூற்றின் பிரகாரம் ரூபா மில்லியன் | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா மில்லியன் | | | |
| (அ) | கிராமப்புற வீதிகள் மற்றும் நீர்ப்பாசனத்திற்காக ஆலோசனையாளரிற்கு வழங்கப்பட்ட முற்பணம் | 77.85 | - | உறுதிப்படுத்தல் கடிதங்கள் | ஆலோசனை கம்பனிக்கு மீதி உறுதிப்படுத்தலை கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தமை தெரிவிக்கப்பட்டுள்ளது. | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் சரியாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) | எடுத்துச்செல்லக்கூடிய தண்ணீருக்காக ஆலோசனையாளரிற்கு வழங்கப்பட்ட முற்பணம் | 38.03 | 33.80 | உறுதிப்படுத்தல் கடிதங்கள் | உறுதிப்படுத்தல் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள தொகை சரியானதாகும். | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் சரியாக பேணப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.3.3 (இ) பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கு முரணாக பதிற்கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட வேண்டிய இரண்டு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்கள் செயற்திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டு சம்பளங்களாக ரூபா 688,975 தொகை செலுத்தப்பட்டது. | செயற்திட்ட பணிப்பாளரால் 2021 ஒக்தோபர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் மிகுதித் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக செலுத்தப்பட்ட சம்பளங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் 4.3.1 ஆம் பந்தி | மேலதிக நேர விலைவிகிதத்தை கணிப்பீடு செய்வதற்கு 50 சதவீத செயற்திட்டப் படி பயன்படுத்தப்பட்டிருந்த தன் காரணமாக ரூபா 59,940 தொகையான மேலதிக நேரப் படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகக் கொடுப்பனவு 3 தவணைகளில் அறவீடு செய்யப்படும். | மேலதிக நேர கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மேற்படி சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டம் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரமே நடத்தப்பட்டுள்ளன. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்களை முறையாக நடாத்த முடியாதிருந்தது. | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | 10 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு 2019 ஒக்தோபரில் பரீட்சிக்கப்பட்ட பின்னர் 2021 ஆகஸ்ட் 31 வரை மீளப் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு செயற்திட்ட பணிப்பாளருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. | எரிபொருள் நுகர்வுக்கு முறையான கட்டுப்பாட்டை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

#### 3.1.1 வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசனையாளர்களின் செயலாற்றல்

| **இல.** | **கணக்காய்வு விடயங்கள்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | 52 எடுத்துச்செல்லக்கூடிய நீர் ஆலோசனை உப செயற்திட்டங்களின் வடிவமைப்பு 2020 யூலை மாத இறுதியிலுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 25 உப ஆலோசனை செயற்திட்டங்களின் 48 சதவீத செயன்முன்னேற்றம் மாத்திரமே அடைந்து கொள்ளப்பட்டிருந்தது. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் தவிர்க்க முடியாத ஏனைய சூழ்நிலைகள் காரணமாக வேலைத்திட்டம் மாற்றப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் மாதாந்த வேலைகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கட்டம் 02 – எடுத்துச்செல்லக்கூடிய நீரின் கீழ் 27 உப செயற்திட்டங்களின் வடிவமைப்புப் பணிகள் 2021 சனவரி மாத இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 சனவரி 31 இல் உள்ளவாறு ஒரு உப செயற்திட்டம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் தவிர்க்க முடியாத ஏனைய சூழ்நிலைகள் காரணமாக வேலைத்திட்டம் மாற்றப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் மாதாந்த வேலைகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கிராமப்புற வீதிகள் மற்றும் நீர்ப்பாசனத்திற்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கட்டம் 01 இன் கீழ் 112 உப செயற்திட்டங்கள் தொடங்கப்பட வேண்டியிருந்ததுடன் 110 உப செயற்திட்டங்கள் 2020 திசெம்பரிற்கு முன்னர் விபரமான வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் என்பவற்றை பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 41 உப செயற்திட்டங்கள் மற்றும் 29 உப செயற்திட்டங்கள் மாத்திரமே முறையே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் தவிர்க்க முடியாத ஏனைய சூழ்நிலைகள் காரணமாக வேலைத்திட்டம் மாற்றப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் மாதாந்த வேலைகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.1.2 உப செயற்திட்டங்களின் செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட விஞ்ஞாபனத்துடன் இணைக்கப்பட்டுள்ள அமுப்படுத்தல் அட்டவணையின் பிரகாரம் 2021 பெப்ரவரியில் உள்ளவாறு 418 உப செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் எடுத்துச்செல்லக்கூடிய நீர் வழங்கல் செயற்திட்டங்களுக்கான 11 நிர்மாணப் பணிகள், 37 கிராமப்புற வீதி உப செயற்திட்டங்கள் மற்றும் 12 நீர்ப்பாசன நீர் வழங்கல் செயற்திட்டங்கள் என்பன 2021 யூன் 30 இல் உள்ளவாறு தொடங்கப்பட்டிருந்தன. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் தவிர்க்க முடியாத ஏனைய சூழ்நிலைகள் காரணமாக வேலைத்திட்டம் மாற்றப்பட்டிருந்தது. | செயற்திட்டப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆலோசனைப் பணிக்காக இணங்கப்பட்ட பதவியணியனர் குழு 2020 யூன் 30 வரை நியமிக்கப்படவில்லை. | சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | இணங்கப்பட்ட பதவியிணியினர் உடனடியாகத் திரட்டப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | மொத்த செலவினமாக காப்புறுதி செலவினம் மீது ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 9.48 மில்லியன் மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கேள்விகளை சமர்ப்பித்த போது காப்புறுதி ஒரு மொத்த தொகையாக கருதப்பட்டது. | மேலதிக கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஊவா மாகாணத்தில் உள்ள இலுக்தன்ன மடுகொல்ல வீதியை புனரமைப்பதற்கான ஒப்பந்தமானது மீளக் கேள்வி கோருதல் நடைமுறையை பின்பற்றாமல் மதிப்பிடப்பட்ட கிரயத்தை விட அதிகமாக ரூபா 133.30 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக செயற்திட்டத்திற்கு ரூபா 21.89 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | மீள்கேள்வி நடைமுறையை பின்பற்றும் போது பயனாளிகளுக்கான நலன்கள் தாமதமாகும். | சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கிரயத்தை குறைப்பதற்கு பெறுகை செயன்முறை பின்பற்றப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| செயற்திட்டத்திற்கான முகாமைத்துவ உதவியாளராக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் 2017 இல் அமைச்சின் மேலதிக செயலாளரிற்கு (செயற்திட்டம்) நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து தனிப்பட்ட உதவியாளராக இணைக்கப்பட்டுள்ளார். செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மூலம் மேலே குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ உதவியாளருக்கு | முகாமைத்துவ உதவியாளர் சார்பாக JICA செயற்திட்டங்களில் அனுபவமுள்ள அமைச்சுக்கு சேவை செய்யும் உத்தியோகத்தர் ஒருவர் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ளார். | நியமனத்தை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

ரூபா 1,554,046 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| முன்னேற்றமடைந்து வரும் வலயங்களில் கிராமிய உள்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் இணைப்பு 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள உப செயற்திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக இலக்குகளை உள்ளடக்குவதற்கு விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள தொடர்புடைய பக்கத்தின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உப செயற்திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக இலக்குகளை உள்ளடக்கி செயற்திட்டத்தால் விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |